(4)

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

## 1432ம் பசலி பஞ்சாமிர்தம் தயாரிப்புக்கு தேவையான பொருட்களை உரிய முறையில் கலந்து தயார் செய்து விற்பனை நிலையங்களுக்கு கொண்டு செல்லும் பணிக்கான செட் கூலி

## ஒப்பந்தப்புள்ளி படிவம்

பசலி 1432-க்கு 01.07.2022 முதல் 30.6.2023 முடிய உள்ள காலத்திற்கு **24.06.2022ம் தேதி பிற்பகல் 01.00 மணிக்குள்** கொடுக்க வேண்டிய ஒப்பந்தப்புள்ளிக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம்

| வரிசை எண் | பணியின் விவரம் | | | |
|---|---|---|---|---|
| | பஞ்சாமிர்த பிரிவிற்குத் தேவையானவாழைக்காய்களை லாரியிலிருந்து இறக்கி, கோசாலா சிறுகுடில் மற்றும் தானியங்கி பஞ்சாமிர்த தயாரிப்பு நிலையங்களில் உள்ள புகைமூட்டம் போடும் அறையில் வாழைக்காய்களை புகைபோட்டு பழமாக்கி உரித்து, இயந்திரத்தில் அரைத்து, தானியங்கி பஞ்சாமிர்த தயாரிப்பு நிலையத்திற்கு கொண்டு சென்று மற்றும் திருக்கோயிலால் வழங்கப்படும் பஞ்சாமிர்த தயாரிப்புக்கான இதர மூலப்பொருட்களை இயந்திரங்கள் மூலம் கலந்தும், பிறகு பஞ்சாமிர்த கலவையினை சூடாக்கி, பின்பு குளிரவைத்து, இயந்திரங்கள் மூலம் மூன்று விதமான டின்களில் அடைத்து கொடுத்து, பஞ்சாமிர்த டப்பாக்களை திருக்கோயில் விற்பனை நிலையங்களில் திருக்கோயில் வாகனங்கள் மூலம் (மலைக்கோயிலுக்கு மின் இழுவை இரயில், மெட்டீரியல் ரோப்கார் மூலமும், அடிவாரங்களில் உள்ள விற்பனை நிலையங்களுக்கு திருக்கோயில் வாகனம் மூலம்) திருக்கோயில நிர்வாகத்தின் தேவைக்கேற்ப அவ்வப்போது குறிப்பிட்டபபடும் எண்ணிக்கையில் தவறாது கொண்டு சென்று சேர்க்கும் பணிக்கு ஒரு செட்டுக்கான கூலி | | | |
| | பஞ்சாமிர்த டப்பாக்களின் வகைகள் | பஞ்சாமிர்தம் தயார் செய்து திருக்கோயில் விற்பனை நிலையங்களுக்கு எடுத்துச்செல்ல செட் ஒன்றுக்கு கூலி (தொகை எண்ணாலும் எழுத்தாலும் அடித்தல் திருத்தலின்றி எழுதப்பட வேண்டும்.) | | |
| | | மலைக்கோயில் விறபனை நிலையங்களுக்கு பஞ்சாமிர்த டப்பாக்கள் மெட்டீரியல் ரோப்கார் மூலம் எடுத்துச் செல்ல செட் 1க்கு கூலி (ரூபாயில்) | மெட்டீரியல் ரோப்கார் பராமரிப்பு காலங்களில் மலைக்கோயில் விற்பனை நிலையங்களுக்கு வின்ச் மூலம் எடுத்துச் செல்ல செட் 1க்கு கூலி (ரூபாயில்) | அடிவாரம் மற்றும் இதர இடங்களில் உள்ள திருக்கோயில் பஞ்சாமிர்த விற்பனை நிலையங்களுக்கு திருக்கோயில் வாகனம் மூலம் எடுத்துச் செல்ல செட் 1க்கு கூலி (ரூபாயில்) |
| அ | ½ கிலோ டப்பாக்களுக்கு கூலி செட் ஒன்றுக்கு | | | |
| ஆ | ¼கிலோ லேமினேட்டட் அலுமினிய டப்பா - கிப்ட் பாக்ஸ்(Gift Box) கூலி செட் ஒன்றுக்கு | | | |

<u>குறிப்பு. ஒரு செட்டின் எண்ணிக்கை விவரம்</u>

(a) ½ கிலோ பெட்ஜார் 1 செட் – 1020எண்ணிக்கை

(b) ½ கிலோ லேமினேட்டட் அலுமினிய கம்போசிட் டப்பா 1 செட் – 1060 எண்ணிக்கை

(C) ¼ கிலோ லேமினேட்டட் அலுமினிய டப்பா (Gift Box)1 செட் – 190 எண்ணிக்கையிலான அட்டைப்பெட்டிகள் கொண்டது (ஒரு அட்டைப்பெட்டி ¼கிலோ லேமினேட்டட் அலுமினியம் டப்பா 12 எண்ணம் கொண்டது)

குறிப்பு.

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையில், ஒவ்வொரு பக்கத்திலும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு படித்து அறிந்து கையொப்பமிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு அறிந்தவராகவே கருதப்படுவர்.

2. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் இனத்திற்கென குறிக்கப்பட்டுள்ள வைப்புத்தொகையை வங்கி வரைவோலையாக பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

3. அசல் சால்வன்சி சான்றிதழ் உள்ளவர்கள் அல்லது அதற்கு நிகரான தொகைக்கு வங்கி வரைவோலை இணைப்பவர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுக்க முடியும். சால்வன்சி / வரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

4. ஒப்பந்தப்புள்ளி படிவத்திலுள்ள அனைத்து நிபந்தனைகளையும் ஏற்று இந்த ஒப்பந்தப்புள்ளியைக் கொடுக்க வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமானவரி, விற்பனை வரி, GST வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகள் அனைத்தும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பட்டியலிலும் மேற்படி வரிகள் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.

6. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தர கணக்கு எண் அட்டை (**PAN CARD)& GST** நகல் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம்
(முழு விலாசத்துடன்)

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.

## 1432ம் பசலி பஞ்சாமிர்தம் தயாரிப்புக்கு தேவையான பொருட்களை உரிய முறையில் கலந்து தயார் செய்து விற்பனை நிலையங்களுக்கு கொண்டு செல்லும் பணிக்கான செட் கூலிக்கான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு 01.07.2022 முதல் 30.6.2023 முடிய 1432-ம் பசலிக்கு பஞ்சாமிர்தம் தயாரித்து, டப்பாக்களில் அடைத்து, திருக்கோயில் குறிப்பிடும் விற்பனை நிலையங்களில் சேர்க்கும் பணிக்கான கூலிக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை இத்திருக்கோயில் தலைமை அலுவலகத்தில் **24.06.2022ம் தேதி பிற்பகல் 01.00 மணிக்குள்** கொடுக்க வேண்டும். மேற்காணும் தேதி மற்றும் நேரத்திற்கு மேல் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **24.06.2022ம் தேதி பிற்பகல் 03.00 மணிஅளவில்** ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற நபர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியில் முழு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

**பஞ்சாமிர்த தயாரிப்பு பணியின் விவரம்.:-**

பஞ்சாமிர்த பிரிவிற்கு கொள்முதல் செய்யும் வாழைக்காய்களை லாரியிலிருந்து இறக்கி, கோசாலா சிறுகுடில் மற்றும் தானியங்கி பஞ்சாமிர்த தயாரிப்பு நிலையங்களில் உள்ள புகைமூட்டம் போடும் அறையில் வாழைக்காய்களை புகைபோட்டு பழமாக்கி உரித்து, அரைத்து தானியங்கி பஞ்சாமிர்த தயாரிப்பு நிலையத்திற்கு கொண்டு சென்று மற்றும் திருக்கோயிலால் வழங்கப்படும் பஞ்சாமிர்த தயாரிப்புக்கான இதர மூலப்பொருட்களை இயந்திரங்கள் மூலம் கலந்தும், பிறகு பஞ்சாமிர்த கலவையினை சூடாக்கி, பின்பு குளிரவைத்து, இயந்திரங்கள் மூலம் மூன்று விதமான டின்களில் அடைத்து மலைக்கோயிலில் உள்ள பஞ்சாமிர்த விற்பனை நிலையங்களுக்கு(அ) மெட்டீரியல் ரோப்கார் மூலம் கொண்டு செல்வதற்கும், (ஆ) மெட்டீரியல் ரோப்கார் பராமரிப்பு காலங்களில் மலைக்கோயில் விற்பனை நிலையங்களுக்கு வின்ச் மூலம் கொண்டு செல்வதற்கும் (இ) அடிவாரம் மற்றும் இதர இடங்களில் உள்ள திருக்கோயில் பஞ்சாமிர்த விற்பனை நிலையங்களுக்கு திருக்கோயில் வாகனங்கள் மூலம் கொண்டு சென்று சேர்க்கும் பணி

**விலை குறிப்பிடுவதற்கான விவரம்**

½ கிலோ டப்பாக்களுக்கு கூலி செட் ஒன்றுக்கு மற்றும் ¼ கிலோ லேமினேட்டட் அலுமினிய டப்பா - கிப்ட் பாக்ஸ்(Gift Box) கூலி செட் ஒன்றுக்கு கூலி விவரம் தனித்தனியாக குறிப்பிட வேண்டும்.

**ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்**

1 ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையாக ரூ.3,00,000/= (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) "இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்" என்ற பதவி பெயருக்கு பழநியில் மாற்றத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிவரைவோலையினை பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். வங்கிவரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2 01.05.2022-ம் தேதிக்குப்பிறகு வட்டாட்சியரிடம் பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயருக்கான ரூ.3,00,000/=க்கான (ரூபாய் மூன்று லட்சம்) அசல் சால்வன்சி சான்றிதழ் இணைக்க வேண்டும். சால்வன்சி சான்றிதழ் தர இயலாதவர்கள் அதற்குரிய தொகைக்கு "இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்" என்ற பெயரில் பழநியில் மாற்றத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிவரைவோலையாகவும் செலுத்தலாம்.

3 ஒப்பந்தப்புள்ளிதாரது நிரந்தர கணக்கு எண் அட்டையின் நகல் (PAN CARD)& GST சான்று நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் கண்டிப்பாக இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

4 மேற்காணும் வரிசை எண்.1 முதல் 3 வரை உள்ள நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் தவறாது இணைத்து கொடுக்க வேண்டும். இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

5 ஒப்பந்ததாரர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

6 ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளி உறையின் மேல் "பஞ்சாமிர்தம் தயாரிப்பு பணிக்கான ஒப்பந்தப்புள்ளி" எனக்குறிப்பிட வேண்டும். வங்கி வரைவோலை விவரம் குறிப்பிட வேண்டும்.

7 ஒப்பந்தப்புள்ளிதாரர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி திருக்கோயில் நிர்வாகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் தனது சொந்த செலவில் உடன் ரூ.20/-க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் குறித்தான ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

8 பஞ்சாமிர்தப்பிரிவு கண்காணிப்பாளர் குறிப்பிடும் அளவு கலவை செய்து டப்பாவில் அடைத்து, விற்பனை நிலையங்களுக்கு எடுத்துச் சென்று கொடுக்க வேண்டும். நாள்தோறும் கலவைப்பணி மேற்கொள்ளும் போது அனைத்து கலவைப்பணியாளர்களும் சீருடை அணிந்து, தலையில் தொப்பி அணிந்தும், கையுறை அணிந்தும் கலவைப்பணி மேற்கொள்ளப்பட வேண்டும். ஒப்பந்ததாரரே சொந்தச் செலவில் நிர்வாகம் குறிப்பிடும் நிறம் அளவு ஆகியவற்றில் சீருடை அணிய வேண்டும். தினந்தோறும் சலவை செய்த சீருடை அணிய வேண்டும்.

9 ஒவ்வொரு 50 செட்டுக்கான வாழைக்காய்களை புகைப்போட்டு பழமாக்கி உரித்த பிறகு புகைப்போடும் அறைகளையும், பழங்கள் உரிக்கும் இடங்களையும், பஞ்சாமிர்தம் தயாரித்து அடைக்கும் இடங்களையும் ஒட்டடை அடித்து, கழுவி தூய்மை செய்த பின்னரே அடுத்த செட் தயாரிப்புக்கான வாழைக்காய்களை புகைப்போடும் பணி ஆரம்பிக்க வேண்டும். இவ்வாறு செய்யப்பட்டது என பஞ்சாமிர்த பிரிவில் சான்று செய்தால் மட்டுமே கூலித்தொகை வழங்கப்படும்.

10 மேற்படி வேலைக்கு பயன்படுத்தும் கூலித்தொழிலாளர்களுக்கு எவ்விதமான நோயோ அல்லது தொற்று நோயோ இல்லாதவராக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். கூலித் தொழிலாளர்கள் மிகவும் சுத்தமாகவும், சுகாதாரமான முறையிலும் உடையணிந்து இருக்க வேண்டும். பஞ்சாமிர்தம் தயாரிப்பு பணிக்கு சுகாதாரமான, ஆரோக்கியமான பணியாளர்கள் மட்டுமே அமர்த்தப்பட வேண்டும். சுகாதாரம் இல்லாத பணியாளர்களை காரணம் கூறாமல் பஞ்சாமிர்தம் தயாரிக்கும் இடத்திலிருந்து வெளியேற்ற கண்காணிப்பாளருக்கு பூரண உரிமையுண்டு.

11 பஞ்சாமிர்தத்திற்கு பயன்படுத்த திருக்கோயில் நிர்வாகம் திட்டப்படி வழங்கும் வாழைப்பழம், நாட்டுச்சர்க்கரை, பேரீட்சம் பழம், கற்கண்டு, நெய், தேன் மற்றும் திருக்கோயில் நிர்வாகம் வழங்கும் ஏலக்காயினைப் பொடி செய்தும் பஞ்சாமிர்தம் தயாரிக்க வேண்டும். மேற்காணும் சாமான்களை பஞ்சாமிர்தப்பிரிவுப் பொறுப்பாளரின் முன்னிலையில் பஞ்சாமிர்த திட்டத்தில் தெரிவித்த அளவு எடை போட்டு பெற்று கலவை செய்தல் வேண்டும்.

..3..

12 ஒப்பந்தப்புள்ளிதாரா் ஐயப்ப பக்தா்கள் வருகை காலமான "ஐப்பசி, காா்த்திகை, மாா்கழி, தை மாதங்கள்", தைப்பூசம், பங்குனி உத்திரம் மற்றும் விசேஷ காலங்களில் பஞ்சாமிா்தப்பிரிவு பொறுப்பாளா் உத்தரவிடும் அளவிற்கு உற்பத்தி செய்ய தேவையானால் மூன்று தனித்தனி செட் ஆட்களை வைத்து தேவையான பஞ்சாமிா்தம் கலவை செய்து டப்பாக்களில் அடைத்து விற்பனை நிலையங்களுக்கு எடுத்துச் சென்று கொடுக்க வேண்டும்.

13 **திருவிழா காலங்களில் தயாரிக்கப்படும் அனைத்து பஞ்சாமிர்த டப்பாக்களையும் இரவு பகல் பாராது விற்பனை நிலையங்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும். தவறினால் மாற்று ஏற்பாடு செய்து அதற்கான தொகை டெண்டர்தாரரிடம் வசூல் செய்யப்படும்.**

14 **சுமை தூக்கும் பணியாளர்கள் மது அல்லது லாகிரி வஸ்துக்களை பயன்படுத்தக் கூடாது.**

15 **விற்பனை நிலையங்களுக்கு கொண்டு செல்லும் டிரேக்களை அவ்வப்போது கழுவி சுத்தம் செய்ய வேண்டும். கொண்டு செல்லும் டிரேக்களை அதே எண்ணிக்கையில் கண்காணிப்பாளரிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும். உடைந்த டிரேக்களை எண்ணிக்கையில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும். டிரேக்கள் எண்ணிக்கை குறையும்பட்சத்தில் அதற்கான தொகை டெண்டர்தாரரிடம் வசூல் செய்யப்படும்**

16 ஒப்பந்தப்புள்ளிதாரா், பஞ்சாமிா்த தயாரிப்பு கூலிக்குரிய பட்டியல் தொகையை வழங்குவதில் நிா்வாக ரீதியில் ஏதேனும் காலதாமதம் ஏற்பட்டாலும், அந்தக் காலதாமதத்திற்கு காரணம் காட்டாமல் தொடா்ந்து தேவையான அளவு தங்கு தடையின்றி நல்லமுறையில் பஞ்சாமிா்தம் தயாா் செய்து கொடுக்க வேண்டும். டெண்டா்தாரரின் பணியாளா்கள் யாரும் திருக்கோயில் பொருள்கள் மற்றும் பஞ்சாமிா்தம் எதுவும் தங்கள் சொந்த நலனுக்காக எடுக்கக்கூடாது.

17 ஒப்பந்தப்புள்ளிதாரா் தனது சாா்பாக வேறு நபா்களை பஞ்சாமிா்தம் தயாா் செய்ய அனுமதிக்கவோ அல்லது தனது ஒப்பந்தப்புள்ளியை வேறு நபருக்கு மாற்றவோ அல்லது உள்ஒப்பந்தப்பந்தம் விடவோ கூடாது.

18 பஞ்சாமிா்தம் தேவையான விபரப்படி, தேவையான அளவு நல்ல முறையில் தயாா் செய்து தராவிட்டாலோ அல்லது திருக்கோயில் சட்டதிட்டங்களுக்கும், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு மாறாக செயல்பட்டாலோ ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டு ஒப்பந்த வைப்புத்தொகை மற்றும் இதர பிடித்த தொகைகள் பறிமுதல் செய்யப்படும். தவறினால் சட்டவிதிகளின்படி கோா்ட் மூலம் கோா்ட் செலவுடன் வசூலிக்கப்படும். மேலும் ஒப்பந்ததாரர் பெயர் கருப்புப்பட்டியலில் சேர்க்கப்படும்

19 தொழிலாளா் நலச்சட்டம், இ.பி.எப்.(E.P.F), இ.எஸ்.ஐ.(E.S.I) ஆகியவற்றில் தெரிவித்துள்ள விதிகளின்படி ஒப்பந்ததாரா் செயல்பட வேண்டும். மேற்படி நிறுவனங்களுக்கு தொகை ஏதும் செலுத்த வேண்டியிருப்பின் அவற்றை ஒப்பந்ததாரரே செலுத்த வேண்டும். கலவைப் பணியாளா்களின் தொழிலாளா் நல சட்டம் குறித்து திருக்கோயில் நிா்வாகம் ஏதும் பொறுப்பேற்காது.

20 பஞ்சாமிா்த தயாரிப்பு பணியாளா்களின் வருகைப்பதிவேடு ஒப்பந்ததாரரே பேண வேண்டும்.

21 கலவைப் பணியாளா்களின் விவரம் குறித்து நிா்வாகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

22 திருக்கோயில் தேவைக்கேற்ப பஞ்சாமிா்தம் தயாா் செய்து, திருக்கோயில் விற்பனை நிலையங்களுக்கு வழங்கத் தவறினால் திருக்கோயில் நிா்வாகம் வேறு நபா்களை வைத்து கலவைப் பணி மேற்கொண்டு பஞ்சாமிா்தம் தயாா் செய்யும். இதனால் திருக்கோயிலுக்கு நிதி இழப்பு ஏற்படின் அந்த தொகையினை ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்யப்படும்.

23 பஞ்சாமிர்தம் தயாரிக்க வழங்கப்படும் உரித்த வாழைப்பழங்களை இயந்திரத்தில் போட்டு ஒன்றாக அரைத்து, அப்படி அரைக்கப்பட்ட பழத்துடன் மேற்காணும் எல்லாப் பொருட்களையும் திட்டப்படி ஒன்றாக சேர்த்து கலவை செய்து பஞ்சாமிர்தம் தயாரிக்க வேண்டும். தயார் செய்யப்பட்ட ஒரு செட் பஞ்சாமிர்தத்தை ½கிலோ பெட்ஜாரில் 1020டப்பாவும், ½கிலோ கம்போசிட் லேமினேட்டட் அலுமினிய டப்பாக்களில் 1060டப்பாவிலும், ¼கிலோ லேமினேட்டட் அலுமினிய டப்பா 190பெரிய அட்டைப்பெட்டிகளிலும் (ஒரு பெரிய அட்டைப்பெட்டி என்பது ¼ கிலோ .லேமினேட்டட் அலுமினியம் டப்பா 12 எண்ணம் கொண்டது.) அடைத்து, சீல் வைக்கும் இயந்திரம் மூலம் சீல் செய்து, அவற்றை மூடி ஒவ்வொரு டப்பாவாக எடை போட்டு பெட்டியில் போட்டு அடைத்து அடுக்கிக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு டப்பாவிலும் தயாரிப்பு தேதி மற்றும் தொகுதி எண்.(Batch No) பதிவு செய்ய உரிய இயந்திரத்தில் வைத்து எடுக்க வேண்டும்.

24 **<u>¼ கிலோ லேமினேட்டட் அலுமினிய டப்பா அடைக்கும் முறை-</u>** ¼கிலோ டப்பாக்களில் பஞ்சாமிர்தம் நிரப்பி, அதன் மூடியை வைத்து சீல் செய்ய வேண்டும். பிறகு ஒவ்வொரு சிறிய அட்டைப் பெட்டியிலும் ¼ கிலோ பஞ்சாமிர்த டப்பா, ஒரு ஸ்பூன், ஒரு விபூதி பாக்கெட் வைத்து டப்பாவை மூட வேண்டும். இவ்வாறு அடைக்கப்பட்ட சிறிய அட்டைப்பெட்டிகள் ஒரு டஜன் எடுத்து ஒரு பெரிய கிப்ட் அட்டைப்பெட்டியில் (Gift Box) வைத்து, பின் பெரிய அட்டைப்பெட்டியை மூடி, செல்லோ டேப் போட்டு ஒட்டி அடுக்கிக் கொடுக்க வேண்டும்.

25 பஞ்சாமிர்த தயாரிப்பு பணியாளர்கள் திருக்கோயில் பாதுகாப்பு பணியாளர்களால் பரிசோதித்த பின்னரே பஞ்சாமிர்த தயாரிப்பு பிரிவு உள்ளே செல்லவும், வெளியே செல்லவும் அனுமதிக்கப்படுவார்கள்.

26 பஞ்சாமிர்தம் தயார் செய்து டப்பாக்களில் அடைக்கப்பட்டவுடன் பஞ்சாமிர்தம் தயார் செய்பவர்கள் பஞ்சாமிர்தம் கலவை செய்ய பயன்படுத்திய பாத்திரங்களையும், இயந்திரங்களையும் மற்றும் பஞ்சாமிர்தக் கலவை செய்யப்பயன்படுத்திய அறையையும் தினமும் நன்றாக கழுவி சுத்தமாக வைக்க வேண்டும். தூய்மையாக இல்லையெனில் அபராதம் விதிக்க திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

27 கலவைக்கூலி ஒப்பந்தப்புள்ளிதாரர் பஞ்சாமிர்தம் தயாரிக்கும் நாட்கள் மற்றும் டின்களில் அடைக்கும் நாட்களில் பஞ்சாமிர்த தயாரிப்பு பிரிவில் வேலை நேரத்தில் உடனிருந்து தனது ஆட்களை வைத்து வேலையை முடித்து தரவேண்டும்.

28 பஞ்சாமிர்த டின்கள் விற்பனை நிலையங்களுக்கு எடுத்துச் செல்ல பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் டிரேக்கள் அனைத்தும் திரும்ப பஞ்சாமிர்த தயாரிப்பு பிரிவில் உடனுக்குடன் எடுத்து வந்து சேர்க்க வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்குரிய தொகை ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்யப்படும்.

29 பஞ்சாமிர்த டின்களை எடுத்துச் செல்ல பயன்படுத்தும் ட்ரே மற்றும் வண்டிகளை பஞ்சாமிர்த பிரிவிலிருந்து பெற்றுக்கொண்டு கவனமுடன் கையாண்டு ஒப்பந்தப்புள்ளி முடிவு நாளில் நல்ல நிலையில் ஒப்படைக்க வேண்டும். அவற்றுக்கு சேதாரம் ஏதும் ஏற்பட்டால் தொகையானது ஒப்பந்தப்புள்ளிதாரரின் டெபாசிட் தொகையிலிருந்து ஈடுசெய்யப்படும். பஞ்சாமிர்த விற்பனை நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படும் பஞ்சாமிர்த டிரேக்களை கவனமுடன் இறக்கி , அவற்றை விற்பனை நிலைய இருப்பு கிடங்கில் அடுக்கி கொடுத்து பிறகு காலி டிரேக்களை பஞ்சாமிர்த நிலையத்திற்கு உடனே கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.

30 காலி சாக்குகள் மற்றும் காலி அட்டைப் பெட்டிகளை வரிசையாக அடுக்கி தரவேண்டும்.

31 பஞ்சாமிர்தத்தில் வேறு மாசு பொருட்கள் கலந்து இருப்பது கண்டறியப் பட்டாலோ பணியில் ஈடுபடும் நபர்களின் கவனக்குறைவால் பஞ்சாமிர்தத்தில் தரம் குறைவு ஏற்பட்டாலோ கலவைக்கூலி ஒப்பந்தப்புள்ளிதாரரே பொறுப்பாக்கப்பட்டு இழப்பீடு வசூல் செய்யப்படுவதுடன், சட்டரீதியான நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்.

32 ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டால் திருக்கோயிலுக்குத் தேவையான பஞ்சாமிர்தத்தை வேறு நபர்களைக் கொண்டோ அல்லது மறுஒப்பந்தப்புள்ளி மூலமோ பஞ்சாமிர்தம் கலவை செய்யப்படும்.

33 இதனால், திருக்கோயிலுக்கு இழப்பேதும் ஏற்பட்டால் இழப்புத்தொகை முழுவதும் முதல் ஒப்பந்தப்புள்ளிதாரரே பொறுப்பாக்கப்பட்டு, இழப்புத்தொகையினை ஒப்பந்த வைப்புத் தொகை மற்றும் இதர பிடித்தங்களிலிருந்து ஈடுசெய்யப்படும். தவறினால் சட்டவிதிகளின்படி நீதிமன்றம் மூலம் நீதிமன்ற செலவுடன் வசூலிக்கப்படும்.

34 ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்படும் விற்பனை வரி, வருமான வரி மற்றும் இதர வரிகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். மேற்படி வரித்தொகை ஒவ்வொரு பட்டியலிலும் பிடித்தம் செய்து பட்டியல் தொகை வழங்கப்படும். ஒப்பந்தப்புள்ளி காலத்தில் வரி விகிதங்களில் மாறுதல் ஏற்பட்டாலும் ஒப்பந்தப்புள்ளி தொகைக்கே ஒப்பந்தகாலம் முடியும் வரை தனது பணியினை செய்து தர வேண்டும்.

35 ஒப்பந்ததாரர் தொழிலாளர் தொடர்பான வழக்குகள் எழும்போது தனது சொந்தப் பொறுப்பில் தீர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றிற்கு திருக்கோயில் நிர்வாகம் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது. தொழிலாளர்களுக்கு விபத்து காப்பீடு ஆகியவற்றை ஒப்பந்ததாரரே செய்து கொள்ள வேண்டும். தொழிலாளர்களுக்கு ஏற்படும் இழப்புகளுக்கு ஒப்பந்ததாரரே முழுப்பொறுப்பாவார்.

36 1432ம் பசலிக்கு பஞ்சாமிர்த தயாரிப்பு பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் மேற்படி பசலி முடிவடைந்த பிறகு 1433 பசலி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஆணையரால் அங்கீகரிக்கப்படும் வரையில் திருக்கோயில் நிர்வாகம் கேட்கும்பட்சத்தில் இதே விலைக்கு தொடர்ந்து பஞ்சாமிர்தம் தயாரிக்கும் பணி செய்து கொடுக்க வேண்டும்.

37 ஒப்பந்தப்புள்ளி சென்னை, இந்து சமய அறநிலையத்துறை, ஆணையர் அங்கீகாரத்திற்கு உட்பட்டது.

38 வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைப் பரிசீலித்து சென்னை, இந்து சமய அறநிலையத்துறை, ஆணையரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்படும் வரை குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரர் செலுத்திய வைப்புத் தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது.

39 மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் ஆணையரால் அனுமதி வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரரின் ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினைத் தவிர மற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் செலுத்தியுள்ள ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை திரும்ப வட்டியின்றி அவர்களுக்கு வழங்கப்படும்.

40 1432-ம் பசலித் தணிக்கை அறிக்கை வரப்பெற்று, அதில் பஞ்சாமிர்தம் கலவை செய்த கலவைக்கூலி கொடுத்த வகையில் தணிக்கை ஆட்சேபனை ஏதுமில்லையென்று தெரிந்த பின்னரே ஒப்பந்தப்புள்ளிதாரரின் வைப்புத் தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும். திருக்கோயிலுக்கு ஏதேனும் நிதியிழப்பு ஏற்பட்டிருப்பின் , அதனை பிணை வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்து மீதி தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

41 எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ, நிராகரிக்கவோ இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.

42 ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் பின்பற்றத்தவறினாலோ அல்லது சரிவரத் நிறைவேற்றத் தவறினாலோ ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

43 ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வழங்கப்படும் ஒவ்வொரு பட்டியலிலும் அவ்வப்போது அமலில் உள்ள வரிகள் பிடித்தம் செய்து மீதி பட்டியல் வழங்கப்படும்.

44 ஒப்பந்த அடிப்படையில் கலவைப்பணி மேற்கொள்ளும்போது திருக்கோயிலுக்கு நிதியிழப்பு ஏற்படுத்தும் வகையில் பணி மேற்கொண்டவர்கள் டெண்டரில் கலந்து கொள்ள தகுதியற்றவர்களாவார்கள். இத்திருக்கோயில் நிர்வாகத்தால் தகுதியிழப்பு/ மறுக்கப்பட்டவர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

45 டெண்டர் முடிவு செய்த பின் கூறப்படும் எவ்வித ஆட்சேபனையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. டெண்டர் திறப்பின் போது ஏற்படும் அனைத்து சந்தேகங்களுக்கும் திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களால் கூறப்படும் முடிவே இறுதியானது.

46 ஒருவர் கொடுத்த டெண்டர் விலை குறைவாக இருந்தபோதிலும் ஒழுங்காக சப்ளை செய்ய மாட்டார் என்று இணை ஆணையர்/செயல் அலுவலர் கருதினால் மேற்படி டெண்டரை நிராகரிக்க இணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களுக்கு பூர்ண உரிமை உண்டு இதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.

47 ஒப்பந்ததாரர் தயாரிப்பு நிலையத்தில் இருந்து விற்பனை நிலையங்கள் கொண்டு செல்லும் வரை முழுப்பொறுப்பாவார்கள். சேதம் ஏற்படுத்தப்பட்டால் வைப்புத் தொகை மற்றும் பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும்.

48 இதர நிபந்தனைகள் டெண்டர் திறப்பின் போது தெரிவிக்கப்படும்.

(ஒம்)நா.நடராஜன்
இணை ஆணையர்/செயல் அலுவலர்

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

30/5/2022
மேலாளர்

30/5/22